**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, NAGERCOIL.**
**Case Number: cc 240/2024**
**PW: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ராபீன் | Caste | : |
| Father's / Husband Name | : திரு. | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF Oaths Acts 1969 (Central Act 44 of 1969) OF THE DAY OF 09.07.2025**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

1. நான் ஆசாரிப்பள்ளத்தில் வசித்து வருகிறேன். சாட்சிகள் வின்சிலா, அருள்தாஸ், ஜோசப் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரி எனது உடன் பிறந்த அண்ணன். 02.05.2024 ல் மதியம் 3 மணிக்கு நான் கல்யாண மண்டபத்தில் அங்கு மேனேஜராக வேலை பார்த்து கொண்டிருந்தேன் அப்போது எனது அண்ணன் மண்டபத்திற்குள் வந்து என்னை பார்த்து கெட்ட வாரத்தையால் பேசி, பீர் பாட்டிலை உடைத்து என் வயிற்றில் குத்த வந்தார். எனது இடது மோதிரவிரலில் காயம் ஏற்பட்டது. அதன் பின் என்னை ஆஸ்பத்திரிக்கு எனது மனைவி மற்றும் எனது மச்சினனும் என்னை அழைத்து சென்றார்கள். அதன் பின் நான் ஆஸீர் மருத்துவமனைக்கு போனேன். 03.05.2024 ல் போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னிடம் வாக்குமூலம் கேட்டார்கள் நான் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ. 1. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

இந்நீதிமன்றத்தில் பகிரங்கமாக சாட்சி சொல்ல என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் பொறிக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1
நாகர்கோவில்

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, NAGERCOIL.**
**Case Number: cc 240/2024**
**PW: 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : வின்சிலா | Caste | : |
| Father's / Husband Name | : திரு. | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF Oaths Acts 1969 (Central Act 44 of 1969) OF THE DAY OF 09.07.2025**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் ஆசாரிப்பள்ளத்தில் வசித்து வருகிறேன். அ.சா. 1 எனது கணவர். ஆஜர் எதிரி எனது கணவரின் அண்ணன். 02.05.2024 ல் மதியம் 3 மணிக்கு எனது கணவர் கல்யாண மண்டபத்தில் அங்கு மேனேஜராக வேலை பார்த்து கொண்டிருந்தார். அப்போது நான் வீட்டில் இருந்தேன். திடீரென்று அலறல் சத்தம் கேட்டது நான் போய் பார்த்த போது எதிரி பீர் பாட்டிலால் வயிற்றில் குத்த வரும் போது அதை எனது கணவர் தடுக்க போகும ்போது எனது கணவருக்கு வலது கையில் குத்து பட்டு ரத்தம் வந்தது உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்னைக்கு இருந்தாலும் என் கையால் தான் உனக்கு சாவு என்று சொல்லி சென்றார். நாங்கள் முதலில் எம்ஜே மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு பார்க்க முடியாது என்று சொன்னதால் ஆஸீர் மருத்துவமனைக்கு கொண்டு போனேன். அங்கு எனது கணவருக்கு இடது கை பின்பக்கமும் மோதிர விரலில் ஆப்ரேசன் செய்தார்கள். போலீசார் மருத்துவமனைக்கு வந்தார்கள். எனது கணவர் மயக்கமாக இருந்ததால் அன்றைய தினம் வாக்குமூலம் கொடுக்கமுடியாததால் மறுநாள் 03.05.2024 ல் போலீசார் வந்து வாக்குமூலம் வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ்ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, NAGERCOIL.**
**Case Number: cc 240/2024**
**PW: 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : அருள்தாஸ் | Caste | : |
| Father's / Husband Name | : திரு. | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF Oaths Acts 1969 (Central Act 44 of 1969) OF THE DAY OF 09.07.2025**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் ஆசாரிப்பள்ளத்தில் வசித்து வருகிறேன். அ.சா. 1,2 ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. நான் அ.சா. 1 ன் வீட்டில் வாடகைக்கு இருக்கிறேன். பக்கத்தில் சத்தம் கேட்டு பார்க்க போனேன். அப்போது ஒரு ஆள் கையில் குப்பி இருந்தது. அவரை நான் பார்க்கவில்லை. ஏனென்றால் அ.சா. 1 க்கு கையில் ரத்தம் வந்ததால் நான் அவரை பார்க்கவில்லை. தனபால் என்று சொன்னார்கள். அவர் யார் என்றால் அ.சா. 1க்கு அண்ணன் என்று சொன்னார்கள். அ.சா. 1 க்கு நான் பார்கும் போது அ.சா. 1 ன் இடது கையில் காயங்கள் இருந்தது. நான் தான் அ.சா 1 ஐ மருத்துவமனைக்கு கொண்டு போனேன். முதலில் எம்ஜே மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அதன் பின் பார்வதிபுரத்தில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, NAGERCOIL.**
**Case Number: cc 240/2024**
**PW: 4**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ஜோசப் | | Caste | : |
| Father's / Husband Name | : திரு. | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF Oaths Acts 1969 (Central Act 44 of 1969) OF THE DAY OF 09.07.2025**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

1. நான் மறவன்குடியிருப்பில் வசித்து வருகிறேன். அ.சா. 1,2,3 ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். 02.05.2024 ல் நான் அ.சா. 1 ன் வீட்டில் இருந்தேன். அப்போது அ.சா. 1 ன் மனைவி என்னிடம் வந்து எதிரி அ.சா. 1 ஐ சத்தம் போட்டு கொண்டிருப்பதாக சொன்னார். அப்போது நான் கிழே இறங்கி பாரப்பதற்குள் அ.சா. 1 ன் மனைவி அலறி அடித்து கொண்டு ஓடினார். அ.சா. 1 ன் வீட்டின் எதிரே மண்டபம் உள்ளது அங்கு ஓடினார். எதிரி கையில் ஒரு பாட்டில் வைத்திருந்தார். எதிரி அந்த பாட்டிலை காம்பவுண்டில் உடைத்து அ.சா. 1 ஐ குத்த போனபார். அ.சா. 1 அதை பிடித்திருந்தார் அதனால் அ.சா. 1 க்கு கையில் காயம் ஏற்பட்டது. எதிரியை பிடிக்க போனோம் முடியவல்லை அதற்குள் போலீசார் வந்தார்கள். அ.சா. 1 ஐ ஆஸீர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.